عقيدة كل مسلم

ஒவ்வொரு முஸ்லிமின் கொள்கை

المؤلف : الشيخ جميل زينو

தொகுப்பாளர் :

ஷைக் முஹம்மத் ஜமீல் ஜைனு

المترجم باللغة التاميلية: غوث خان عمرى

தமிழாக்கம்

மௌலவி ஹாபிஸ் கௌஸ் கான் உமரி

வெளியீடு

جمعية أهل الحديث تاملنادو و بانديشيرى

ஜம்இய்யத்து அஹ்லே ஹதீஸ் தமிழ்நாடு & பாண்டிச்சேரி

191, மஸ்ஜிதே சார்மினார், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு

பட்டாளம், சென்னை - 600 012

தொடர்பு 044 26623591 மின்னஞ்சல் jahtnp@gmail.com

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

ஒவ்வொரு முஸ்லிமிடமும் இருக்க வேண்டிய அடிப்படைக் கொள்கை

தொகுப்பாளர்:
ஷெய்க் முஹம்மத் ஜமீல் ஜைனு

தமிழாக்கம்:
மௌலவி கௌஸ் உமரி

வெளியீடு:
ஜம்இய்யத்து அஹ்லே ஹதீஸ் தமிழ்நாடு & பாண்டிச்சேரி
மஸ்ஜிதே சார்மினார்,
191,பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, பட்டாளம், சென்னை - 12. தமிழ்நாடு

புத்தக விபரத் தொகுப்பு

நூலின் பெயர் : ஒவ்வொரு முஸ்லிமிடமும் இருக்க வேண்டிய அடிப்படைக் கொள்கை

தொகுப்பாளர் : ஷெய்க் முஹம்மத் ஜமீல் ஜைனு

தமிழாக்கம் : மௌலவி கௌஸ் உமரி

முதல் பதிப்பு : ஜனவரி - 2013

2ம் பதிப்பு : மே - 2015

பக்கங்கள் : 32

வெளியீடு : ஜம்யிய்யத்து அஹ்லே ஹதீஸ்
தமிழ்நாடு & பாண்டிச்சேரி
மஸ்ஜிதே சார்மினார்,
191,பெரம்பூர் பேரக்ஸ் ரோடு,
பட்டாளம், சென்னை - 600 012.
தமிழ்நாடு

மதிப்புரை

அளவற்ற அருளாளனும், அன்புடையனுமாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகுக! இணையில்லா இறைவனை தூய உள்ளத்தோடு அவனுக்கு வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதற்காகவும், நேர்வழி காட்டுவதற்காகவும் அருளப்பட்ட இறுதி தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீதும், அவர் குடும்பத்தவர் மீதும், நபித்தோழர்கள் மீதும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக!

ஷெய்க் ஜமீல் ஜைனு அவர்கள் அரபி மொழியில் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மிக அவசியமாக அறிந்து வைத்திருக்க வேண்டிய அடிப்படை கொள்கைகள் என்ன என்பதை கேள்வி - பதில் வடிவில் தொகுத்திருக்கிறார்கள்.

தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்காக மௌலவி ஹாஃபிழ் கௌஸ் கான் உமரி அவர்கள் எளிய முறையில் இந்த கையேடை தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலியை அருள்வானாக! இது சுமார் 60 கேள்வி - பதில்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு பதிலும் குர்ஆன், ஹதீஸ் ஆதாரத்துடன் அமைந்திருப்பது மிக சிறப்பாக, பலனளிக்க கூடியதாக இருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் அவைகளை படித்து தெரிந்துக் கொள்ள வேண்டும். நம்முடைய அடிப்படைக் கொள்கைகள் சரியாக இருந்தால் தான் நம்முடைய வணக்கவழிபாடுகளும் இறைவனிடம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அறிந்திருக்கிறோம். எனவே நாம் தெரிந்து, அறிந்து, கேள்விப்பட்டவைகள் சரியானதா? அல்லது அவைகளில் குறைபாடுகள் உள்ளனவா? என்று மதிப்பிடுவதற்கும் இந்த கையேடு உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன். நல்ல திறந்த உணர்வோடு இவைகளை படியுங்கள், மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள்.

இது போன்ற சிரிய கையேடுகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும். அதன் மூலம் நமது ஈமானை உறுதியாக்கிக் கொண்டு மறுமையில் வெற்றி பெற முயற்சி செய்வோமாக!

ஷெய்க் முஹ்யுத்தீன் உமரி மதனி

(முன்னாள் பேராசிரியர்: ஜாமிஆ தாருஸ்ஸலாம் உமராபாத்)

என்னுரை(நுழையும் முன்)

இஸ்லாமிய கொள்கை என்பது இஸ்லாமின் உயிர்நாடியாகும், அதனை அறிந்து அதன் படி நடப்பது கட்டாய கடமையாகும். அதனை போதிப்பற்காகவே நபிமார்கள் அனைவரும் அனுப்பபட்டார்கள், ஸலஃபு ஸாலிஹீன்களும் இந்த அகீதாவை கற்பதிலும், கற்பிப்பதிலும் முழு முயற்சியை எடுத்துள்ளார்கள்.

நான் தமிழாக்கம் செய்துள்ள இந்நூல் ஷெய்க் ஜமீல் ஜைனு அகீதாவை (கொள்கை)ப் பற்றி எழுதியுள்ள ஒரு துண்டுப் பிரசுரமாகும். தமிழக முஸ்லிம் களுக்கு ஏகத்துவக் கொள்கை போதிப்பதற்காகவும், உண்மையான மற்றும் தூய்மையான மார்க்கத்தை அவர்களிடம் கொண்டுப்போய் சேர்ப்பதற்காகவும் பல இயக்கங்கள், மார்க்க அறிஞர்கள் முயற்சிகள் செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் ஒரு பக்கம் மக்கள் ஷிர்க்கிலும், வழிகேடுகளிலும், தத்தளித்துக் கொண்டிருக்க மறுபக்கம் தவ்ஹீதை போதிக்கின்ற ஒருசில இயக்கங்களிடையே அஃகீதாவில் குளருபடியை பார்க்க கூடிய நிலை இன்று தமிழகத்தில் உருவாகியுள்ளது,

எனவே மக்கள் உண்மையான கொள்கையை அறிந்து தெளிந்த சிந்தனை யோடு கொள்கையில் பிடிப்புள்ளவர்களாக மாறவேண்டும் என்ற எண்ணத்தில் எடுக்கப்பட்ட ஒரு சிறிய முயற்சி தான் உங்கள் கைகளில் புத்தகமாக வந்துள்ளது. இந்த முயற்சியை முழுமைப்படுத்தி தந்த அல்லாஹ்வுக்கே முதல் நன்றியினை சமர்ப்பிக்கிறேன். பிறகு இந்த சிறிய கையேடை மொழிபெயர்ப்பு செய்வதற்கு வலியுறித்திய ஷேக் டாக்டர் ஆர்.கே.நூர் முஹம்மத் உமரி, மதனி அவர்களுக்கும். இதில் திருத்தும் செய்துதந்த மௌலவி ஹஸன் அலி உமரி அவர்களுக்கும் இந்த நூலிற்கு மதிப்புரை வழங்கிய எனது ஆசிரியர் ஷெய்க் முஹயித்தீன் உமரி, மதனி அவர்களுக்கும், மற்றும் இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்த எல்லா சகோதரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எனது இந்த சிறிய முயற்சியை அல்லாஹ் அங்கீகரிக்க துஆ செய்யுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

மௌலவி ஹாஃபிழ் கௌஸ் உமரி.

கேள்வி: 1, அல்லாஹ் நம்மை எதற்காக படைத்தான்?

பதில் : அவனை மட்டுமே வணங்கி அவனுக்கு எதனையும் இணைவைக்காமலிருக்க வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் நம்மை படைத்துள்ளான்.

திருக்குர்ஆன் ஆதாரம் : இன்னும் ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதர்காகவேயன்றி வேறு எதற்காகவும் நான் படைக்கவில்லை. **அல்குர்ஆன் 51:56**

ஹதீஸ் ஆதாரம்: அடியார்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்கி அவனுக்கு இணைவைக்காமலிருப்பதே அவர்கள் அல்லாஹ் விற்கு செய்ய வேண்டிய கடமையாகும். **நூல் : புகாரி**

கேள்வி:2, நாம் அல்லாஹ்வை எவ்வாறு வணங்க வேண்டும்?

பதில்: அல்லாஹ்வும், அவனது தூதரும் நம்மை எப்படி வணங்க கட்டளையிட்டிருக்கிறார்களோ அப்படியே அல்லாஹ்வை உளத்தூய்மையுடன் வணங்குவது கடமையாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : இன்னும், அல்லாஹ்வை - அவனுக்காகவே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக அல்லாஹ்வை வணங்குவதற்காகவே தவிர (வேறெதையும்) அவர்கள் கட்டளையிடப்பட வில்லை. **அல்குர்ஆன் 98:5**

ஹதீஸ் ஆதாரம்: எவர் நமது மார்க்கத்தில் இல்லாத புதியதொரு செயலை (நன்மை என நினைத்து) செய்கிறாரோ அது நிராகரிக்கப்படும்.
நூல் : முஸ்லிம்

கேள்வி : 3, நாம் அல்லாஹ்வை அச்சத்தோடும், ஆதர வோடும் வணங்குவது அவசியமா?

பதில்: ஆம், நாம் அல்லாஹ்வை அச்சத்தோடும், ஆதரவோடும் வணங்குவது அவசியமாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : (இறைவனின் தண்டனைக்கு) பயந்தும், (அவனுடைய அருளை) ஆசித்தும் அவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருங்கள். **அல்குர்ஆன் 7:56**

ஹதீஸ் ஆதாரம்: நான் அல்லாஹ்விடத்தில் சுவர்க்கத்தை வேண்டுகிறேன், மேலும் நரகத்தை விட்டுப் பாதுகாப்புத் தேடுகிறேன்.
நூல் : அபூதாஊத்

கேள்வி : 4, வணக்கவழிபாடுகளில் இஹ்ஸான் என்றால் என்ன?

பதில் : இஹ்ஸான் என்பது அல்லாஹ் நம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்தோடு அவனை வணங்குவதாகும்

திருக்குர்ஆன் ஆதாரம் : 1) நிச்சயமாக அல்லாஹ் உங்களை கண்காணிப்பவனாக இருக்கிறான். **அல்குர்ஆன் 4:1**

2) அவன் எத்தகையவனென்றால், நீர் (தனித்து வணங்குவதற்காக) நிற்கும் சமயத்தில், அவன் உம்மைப்பார்க்கிறான்.
அல்குர்ஆன் 26:218

ஹதீஸ் ஆதாரம்: இஹ்ஸான் என்பது நீ அல்லாஹ்வை பார்ப்பது போல் வணங்குவதாகும், அவ்வாரு இல்லையெனில் குறைந்தது அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான், என்ற எண்ணமாவது வரவேண்டும். **நூல் : முஸ்லிம்**

கேள்வி :5, அல்லாஹ் தன் தூதர்களை எதற்காக அனுப்பினான்?

பதில்: அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்குவதின் பக்கம்

அழைப்பதற்காகவும், அவனுக்கு இணைகற்பிப்பதை விட்டு தடுப் பதற்காகவும் தான் இறைவன் தன் தூதர்களை அனுப்பியுள்ளான்.

திருக்குர்ஆன் ஆதாரம் : ஒவ்வொரு சமூகத்திலும் திட்டமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம். (அத்தூதர் அச்சமூகத் தவர்களிடம்) அல்லாஹ்வையே வணங்குங்கள். (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து) தாகூத்தி லிருந்தும் நீங்கள் விலகி இருங்கள். (என்று கூறினார்கள்).

அல்குர்ஆன் 16:36

ஹதீஸ் ஆதாரம்: நபிமார்கள் அனைவரும் சகோதரராவார்கள், மேலும் அவர்களின் மார்க்கமும் ஒன்று தான்(ஏக இறைவனின் பக்கம் அழைப்பது). **நூல் : முஸ்லிம்**

கேள்வி : 6, தவ்ஹீதுல் உலூஹிய்யா என்றால் என்ன?

பதில்: பிரார்த்தனை, நேர்ச்சை, சட்டங்களை அமல்படுத்தல் போன்றவற்றில் அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்கி ஒருமைப்படுத்துவது.

திருக்குர்ஆன் ஆதாரம் : ஆகவே (நபியே!) நிச்சயமாக, அல்லாஹ் வைத்தவிர (வணக்கத்திற்குறிய வேறு) நாயன் இல்லை என்பதை நீர் அறிந்துகொள்வீராக! **அல்குர்ஆன் 47:19**

ஹதீஸ் ஆதாரம்: நீர் மக்களை வணக்கத்திற்குறிய இறைவன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாரும் இல்லை என்ற சாட்சியின் பக்கமே அழைக்க வேண்டும் என நாயகம் நபி(ஸல்) அவர்கள் முஆஃத்(ரலி) அவர்களுக்கு அறிவுரை செய்தார்கள். **நூல்கள் : புகாரி, முஸ்லிம்**

கேள்வி : 7, லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருள் என்ன?

பதில்: உண்மையான வணக்கத்திற்க்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.

திருக்குர்ஆன் ஆதாரம் : அது(ஏனெனில்)நிச்சயமாக அல்லாஹ் அவனே மெய்யானவானான், அவனைத்தவிர அவர்கள் அழைப்பது பொய்யானதாகும். **அல்குர்ஆன் 31:30**

ஹதீஸ் ஆதாரம்: எவர் "லாஇலாஹ இல்லல்லாஹ்" எனக் கூறி அல்லாஹ்வைத் தவிர்த்து வணங்கப்படக்கூடிய அனைத்தையும் மறுத்து விடுகிறாரோ அவருடைய உடைமையும், உயிரும் பாதுகாப்பு பெற்றுவிட்டன. **நூல் : முஸ்லிம்**

கேள்வி: 8, அல்லாஹ்வின் பண்புகளில் அவனை ஒருமைப் படுத்துவ தென்பது என்ன?

பதில்: அல்லாஹ் தனக்கு இருப்பதாகக் கூறிய பண்புகளையும், அவனது தூதர்(ஸல்) அவர்கள் கூறிய பண்புகளையும் அல்லாஹ் விற்கு இருப்பதாக உறுதிப்படுத்துவது.

திருக்குர்ஆன் ஆதாரம் : அவனைப்போன்று எப்பொருளும் இல்லை. அவனே (யாவற்றையும்) செவியேற்கிறவன், பார்க்கிறவன்.

அல்குர்ஆன் 42:11

ஹதீஸ் ஆதாரம்: நமது இறைவன் ஒவ்வொரு இரவிலும் முதல் வானத்திற்கு இறங்கி வருகிறான்.(அவனுக்க உரிய வகையில்)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

கேள்வி :9, ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்வதினால் ஒரு முஸ்லிமுக்கு என்ன பயன்?

பதில்: இம்மையில் நேர்வழியையும்.மறுமையில் நிம்மதியான வாழ்க்கையும் பெற முடியும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : நம்பிக்கைக் கொண்டு, பின்னர் தங்களுடைய நம்பிக்கையுடன் (இணைவைத்தல் எனும்) அநீதத் தைக் கொண்டு கலந்து விட வில்லையே அத்தகையோர் - அவர் களுக்கே அபயமுண்டு. அவர்களே நேர்வழி பெற்றவர்கள்.

அல்குர்அன் 6:82

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ்வின் மீது அடியார்களின் உரிமை என்பது அவனுக்கு இணைவைக்காதவர்களை அவன் வேதனைக் கொடுக்காமல் இருப்பதேயாகும். **நூல்கள் : புகாரி, முஸ்லிம்**

கேள்வி: 10, அல்லாஹ் எங்கே இருக்கிறான்?

பதில்: ஏழு வாணங்களுக்கு மேல் அர்ஷின் மீது உயர்ந்திருக்கிறான்.

திருக்குர்ஆன் ஆதாரம் : அர்ரஹ்மான்(தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீதிருப்பது அவனுக்கு எவ்வாரு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான். **அல்குர்ஆன் 20:5**

ஹதீஸ் ஆதாரம்: நிச்சயமாக அல்லாஹ் எனது அருள் எனது கோபத்தை முந்திவிட்டது என்று ஒரு அதிகாரத்தை எழுதி விட்டான். அது அவனது அர்ஷுக்கு மேல் எழுதப்பட்டுள்ளது. **நூல்: புகாரி**

கேள்வி : 11, அல்லாஹ் அவனது உள்ளமையோடு நம்மோடு இருக்கிறானா? அல்லது தன் ஞானத்தோடு நம்முடன் இருக் கிறானா?

பதில்: அல்லாஹ் தனது ஞானத்தோடும், ஆற்றலோடும் நம்முடன் இருக்கிறான். நம்மை கண்காணித்துக் கொண்டும், செவியேற்றுக் கொண்டும் இருக்கிறான்.

திருக்குர்ஆன் ஆதாரம் : நீங்கள் இருவரும் பயப்பட வேண்டாம். நிச்சயமாக நான் உங்களிருவருடன் (யாவையும்) கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டும் இருப்பேன் என (அல்லாஹ் வாகிய) அவன் கூறினான். **அல்குர்ஆன் 20:46**

ஹதீஸ் ஆதாரம்: நிச்சயமாக நீங்கள் செவியேற்கின்றவனையும், உங்களுக்கு மிக சமீபமாக இருப்பவனையும் தான் அழைக் கின்றீர்கள், மேலும் அவன் உங்களோடு இருக்கிறான்.

நூல் : முஸ்லிம்

கேள்வி :12, பாவங்களிலேயே மிகப்பெரிய பாவம் எது?

பதில்: பாவங்களிலேயே மிகப்பெரிய பாவம் பெரிய இணை வைத்தலாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : என் அருமை மகனே! நீ அல்லாஹ் வுக்கு இணைவைக்காதே! நிச்சயமாக இணைவைத்தல் மிகப்பெரிய அநியாயமாகும். **அல்குர்ஆன் 31:33**

ஹதீஸ் ஆதாரம்: நபி(ஸல்)அவர்களிடம் மிகப்பெரிய பாவம்-எது என கேட்கப்பட்ட போது அல்லாஹ் உன்னை படைத்திருக்க நீ அவனை விட்டுவிட்டு அவனுக்கு நிகராக வேறு கடவுளை ஏற்படுத்திக்கொள்வது என்று கூறினார்கள். **நூல் : முஸ்லிம்**

கேள்வி : 13, பெரிய இணைவைத்தல் என்றால் என்ன?

பதில்: பிரார்த்தனை, நேர்ச்சைப் போன்ற அல்லாஹ்வுக்கு மட்டுமே செலுத்த வேண்டிய வணக்கங்களை அல்லாஹ் அல்லாதவர் களுக்கு செலுத்துவது.

திருக்குர்ஆன் ஆதாரம் : நான் பிரார்த்தனைச் செய்து அழைப்ப தெல்லாம் என் இரட்சகனையே! அவனுக்கு ஒருவனையும் நான் இணையாக்க மாட்டேன். என்று நபியே நீர் கூறுவீராக!

அல்குர்ஆன் 72:20

ஹதீஸ் ஆதாரம்: பாவங்களிலேயே மிகப்பெரிய பாவம் அல்லாஹ்வுக்கு இணைவைப்பதாகும். **நூல் : புகாரி**

கேள்வி :14, பெரிய இணைவைத்தலால் ஏற்படும் தீங்குகள் என்ன?

பதில்: நரகத்தில் நிரந்தரமாக தங்குவதற்கு பெரிய இணைவைத்தல் காரணமாக இருக்கிறது.

திருக்குர்ஆன் ஆதாரம் : நிச்சயமாக எவர் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றாரோ அவர் மீது திட்டமாக அல்லாஹ் சுவன பதியை தடுத்துவிடுகின்றான்,மேலும்,அவர் தங்குமிடம் நரகம்தான்.

அல்குர்ஆன் 5:72

ஹதீஸ் ஆதாரம்: எவன் அல்லாஹ்வுக்கு இணைவைத்த நிலை யில் மரணிக்கின்றாரோ அவர் நரகத்தில் தான் நுழைவார்.

நூல் : முஸ்லிம்

கேள்வி : 15, இணைவுப்புடன் கலந்த நற்செயல்களுக்கு பலன் கிடைக்குமா?

பதில்: இணைவுப்புடன் கலந்த நற்செயல்களுக்கு எந்த பலனும் கிடைக்காது.

திருக்குர்ஆன் ஆதாரம் : இன்னும், அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணைவைத்திருந்தால் அவர்கள் செய்து கொண்டிருந்த (நன்மை யான) வைகள் (யாவும்) அவர்களை விட்டு அழிந்துவிடும்.

அல்குர்ஆன் 6:88

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ் கூறுகிறான்: எவர் ஒருவர் ஒரு செயலை செய்து அதில் என்னோடு மற்றவரையும் இணையாக்கிறாரோ அவரையும் அவரது இணைவைத்தலையும் நான் விட்டுவிடுகிறேன், (நிராகரித்து விடுகிறேன்)

ஹதீஸுல் குதுஸீ, முஸ்லிம்

கேள்வி :16, இன்றைய முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றார்களா?

பதில்: ஆம், (மிகவும் வேதனைக்குறிய விஷயம்) இன்றைய முஸ்லிம் களில் அநேகமானவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றனர்.

திருக்குர்ஆன் ஆதாரம் : மேலும் அவர்களில் பெரும்பாலோர் - அவர்கள் இணைவைக்கின்றவர்களாகவே தவிர அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில்லை! **அல்குர்ஆன் 12:106**

ஹதீஸ் ஆதாரம்: எனது சமூகத்தில் சிலர் இறைமறுப்பாளர் களுடன் இணைந்து சிலைகளை வணங்காதவரை மறுமை நாள் ஏற்படாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். **நூல் : திர்மிதி**

கேள்வி :17, அவ்லியாக்கள் (இறைநேசர்கள்) போன்ற அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் தன் தேவைகளை கேட்பதின் நிலை என்ன?

பதில்: அல்லாஹ் அல்லாதவர்களை உதவிக்கு அழைப்பது இணைவைப்பாகும், இந்த இணைவைத்தல் ஒருவரை நிரந்தரமாக நரகத்தில் தள்ளிவிடும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : எனவே, அல்லாஹ்வுடன் வேறோர் நாயனை நீர் அழைக்காதீர், (அவ்வாரு அழைத்தால்) அதனால் நீர் வேதனை செய்யப்படுபவர்களில் (உள்ளவராக) ஆகிவிடுவீர். **அல்குர்ஆன் 26:213**

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்ற நிலையில் ஒருவன் மரணித்தால், அவர் நரகத்தில் தான் நுழைவார்.
நூல் : புகாரி

கேள்வி :18, (துஆ)பிரார்த்தனை என்பது அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய வணக்கமா?

பதில்: ஆம். (துஆ) பிரார்த்தனை என்பது அல்லாஹ்வுக்கு மட்டும் செலுத்த வேண்டிய வணக்கமாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : அவர்கள் நேர்வழியை அடைவதற்காக, என்னையே அழைக்கட்டும், நான் அழைப்பவரின் அழைப்புக்கு பதிலளிப்பேன். **அல்குர்ஆன் 2:186**

ஹதீஸ் ஆதாரம்: பிரார்த்தனை என்பது அதுவே வணக்கமாகும். **நூல் : திர்மிதி**

கேள்வி : 19, மரணித்தவர்கள் நம் அழைப்பை செவியேற்பார்களா?

பதில்: மரணித்தவர்கள் நம் அழைப்பை செவியேற்க மாட்டார்கள்.

திருக்குர்ஆன் ஆதாரம் : (நபியே) கப்ரு(சமாதி)களில் உள்ளவர்களைச் செவியேற்கச் செய்பவராக நீர் இல்லை. **அல்குர்ஆன் 35:22**

ஹதீஸ் ஆதாரம்: நிச்சயமாக பூமியில் சுற்றித்திரியும் சில வானவர்கள் இருக்கின்றனர், அவர்கள் என் சமூகத்தின் ஸலாமை என்னிடத்தில் எத்திவைக்கின்றனர். **நூல் : அஹ்மத்**

கேள்வி :20, இறந்தவர்கள் அல்லது மறைந்திருப்பவர்களிடம் துன்பங்களை நீக்க கோரலாமா?

பதில்: அவர்களிடத்தில் துன்பங்களை நீக்க கோரக்கூடாது, மாறாக அல்லாஹ்விடத்தில் மட்டுமே துன்பங்களை நீக்க கோரவேண்டும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : நிச்சயமாக உங்கள் இரட்சகனிடம் (உங்களை) இரட்சிக்கத்தேடியபோது அவன் உங்களுக்கு பதிலளித்தான். **அல்குர்ஆன் 8:9**

ஹதீஸ் ஆதாரம்: நபி(ஸல்) அவர்களுக்கு ஏதாவது சோகம், அல்லது துன்பம் ஏற்பட்டால் "*யா ஹய்யு யா ஃகய்யூம் பிரஹ்மத்திக்க அஸ்தஃ கீஸ்*" உயிருள்ளவனே! நிரந்தரமாக இருப்பவனே! உன் அருளினால் துன்பங்களை நீக்குமாறு நான் வேண்டுகிறேன். என்று கூறுவார்கள்.

கேள்வி : 21, அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் உதவி கேட்பது கூடுமா?

பதில்: அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் உதவி கேட்பது ஒரு போதும் கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : (எங்கள் இரட்சகா!)உன்னையே நாங்கள் வணங்குகின்றோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகின்றோம்.
அல்குர்ஆன் 1:5

ஹதீஸ் ஆதாரம்: நீ ஏதாவது வேண்டினால் அல்லாஹ்விடத்தில் மட்டுமே வேண்டிக்கொள், நீ உதவி தேடினால் அல்லாஹ் விடத்தில் மட்டுமே உதவி தேடிக்கொள்.

கேள்வி : 22, உயிரோடிருப்பவர்களிடம் உதவி கேட்கலாமா?

பதில்: உயிரோடிருப்பவர்களின் சக்திக்குட்பட்டவைகளில் அவர் களிடம் உதவி கேட்கலாம்.

திருக்குர்ஆன் ஆதாரம்: இன்னும், நன்மைக்கும், (அல்லாஹ் வுடைய) பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்; பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக் கொருவர் உதவியாக இருக்க வேண்டாம். **அல்குர்ஆன் 5:2**

ஹதீஸ் ஆதாரம்: ஒரு அடியான் தன் சகோதரனுக்கு உதவி

செய்து கொண்டிருக்கும் காலமெல்லாம் அல்லாஹ் அந்த அடியானுக்கு உதவி செய்து கொண்டே இருப்பான். **நூல் : முஸ்லிம்**

கேள்வி :23, அல்லாஹ் அல்லாதவர்களுக்காக நேர்ச்சை செய்யலாமா?

பதில்: அல்லாஹ் அல்லாதவர்களுக்காக நேர்ச்சை செய்வது ஒரு போதும் கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : என் இரட்சகனே! நிச்சயமாக நான் என் வயிற்றில் உள்ளதை உனக்காக உரிமை விடப்பட்டதாக நேர்ச்சை செய்து கொண்டேன்; ஆதலால் (அதனை) என்னிடமிருந்து நீ அங்கீகரித்துக் கொள்வாயாக! **அல்குர்ஆன் 3:35**

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ்வுக்கு கீழ்ப்படும் விஷயங்களில் எவன் நேர்ச்சை செய்தானோ அவன் அதை நிறைவேற்றட்டும், எவன் அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் விஷயங்களில் நேர்ச்சை செய்தானோ அவன் அதை நிறைவேற்ற வேண்டாம். **நூல் : புகாரி**

கேள்வி: 24, அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அறுத்து பலியிடலாமா?

பதில்: ஒரு போதும் கூடாது. ஏனெனில் அது பெரிய இணை வைத்தலாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : ஆகவே, நீர் உமதிரட்சகனைத் தொழுது, இன்னும் (குர்பானியும் கொடுத்து அதை) அறுப்பீராக.

அல்குர்ஆன் 108:2

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அறுத்து பலயிடு கின்றவர்களை அல்லாஹ் சபிக்கின்றான். **நூல் : முஸ்லிம்**

கேள்வி: 25, (நன்மை என நினைத்து) ஃகப்ருகளை தவாஃப் செய்வது (சுற்றிவருவது)கூடுமா?

பதில்: (இறையில்லம்) கஃபாவைத்தவிர வேறெதையும் (நன்மை என நினைத்து) சுற்றிவருவது கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : மேலும் அவர்கள் பூர்வீக ஆலயமான (கஃபா) எனும் வீட்டையும் தவாஃப் செய்ய வேண்டும்.

ஹதீஸ் ஆதாரம்: எவனொருவன் கஃபாவை ஏழு முறை வலம் வந்து இரண்டு ரக்கஅத்கள் தொழுதானோ அவன் இறை பாதையில் ஒரு அடிமையை விடுவித்தவனைப் போலாவான்.

நூல் : இப்னுமாஜஹ்

கேள்வி: 26, கப்ருகளை நோக்கி தொழுவது கூடுமா?

பதில்: கப்ருகளை நோக்கி தொழுவது கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : எனவே,நீர் (தொழும்போது மக்கா விலுள்ள) மஸ்ஜிதுல் ஹராமின் பக்கமாக உம்முடைய முகத்தைத் திருப்புவீராக! **அல்குர்ஆன் 2:144**

ஹதீஸ் ஆதாரம்: கப்ருகள் மீது உட்காராதீர்கள்,மேலும் அதை நோக்கி தொழவும் செய்யாதீர்கள். **நூல் : முஸ்லிம்**

கேள்வி :27, சூனியத்தில் ஈடுபடுவதின் நிலை என்ன?

பதில்: சூனியத்தில் ஈடுபடுவது இறைநிராகரிப்பாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : எனினும் ஷைத்தான்கள் நிராகரித்துக் கொண்டிருந்தனர்,அவர்கள் மக்களுக்கு சூனியத்தைக் கற்றுக் கொடுத்து வந்தார்கள். **அல்குர்ஆன் 2:102**

ஹதீஸ் ஆதாரம்: அழிவைத்தரும் ஏழு பாவங்களை விட்டு விலகி இருங்கள். அவை 1. இணைவைத்தல், 2. சூனியம் செய்வது„

நூல் : புகாரி

கேள்வி:28, ஜோதிடன் மற்றும் குறிசொல்பவனிடத்தில் செல்வது கூடுமா?

பதில்: அவர்களிடம் செல்வது ஒருபோதும் கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : (விசுவாசிகளே!) ஷைத்தான்கள் எவர்மீது இறங்குகின்றனர் என்பதை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? (செயலால்) பாவியான, (சொல்லால்) அதிகமாகப் பொய் கூறும் ஒவ்வொருவரின் மீதும் அவர்கள் இறங்குகின்றனர்.

அல்குர்ஆன் 27:221,222

ஹதீஸ் ஆதாரம்: எவரொருவர் ஜோதிடனிடம் சென்று தன் எதிர் காலத்தைப்பற்றி விசாரித்தானோ அவனுடைய நாற்பது நாட்களின் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படாது **நூல் : முஸ்லிம்**

கேள்வி29: ஜோதிடன், மற்றும் குறி சொல்பவன் கூறும் தகவல் களை நம்பலாமா?

பதில்: மறைவானவற்றைப் பற்றி அவர்கள் கூறுவதை ஒருபோதும் நம்பக்கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : அல்லாஹ்வைத்தவிர வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்கள்(எவரும்)மறைந்திருப்பவைகளை அறிய மாட்டார்கள். **அல்குர்ஆன் 27:65**

ஹதீஸ் ஆதாரம்: எவர் ஜோதிடனிடத்தில் சென்று அவர் சொல் வதை நம்புகிறாரோ அவர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீது இறக்கப்

பட்ட அல்குர்ஆனை நிராகரித்துவிட்டவராவார். **நூல் : அஹ்மத்**

கேள்வி30: மறைவானவற்றை யாராவது அறிவார்களா?

பதில்: அல்லாஹ்வைத்தவிர வேறுயாரும் மறைவானவற்றை அறியமாட்டார்கள்.

திருக்குர்ஆன் ஆதாரம் : இன்னும் அவனிடமே மறைவான வற்றின் சாவிகள் இருக்கின்றன. **அல்குர்ஆன் 6:59**

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ்வைத்தவிர வேறுயாரும் மறைவானவற்றை அறியமாட்டார்கள். **நூல் : தப்ரானி**

கேள்வி : 31 முஸ்லிம்கள் எதைக் கொண்டு தங்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும்?

பதில்: முஸ்லிம்கள் திருக்குர்ஆன் மற்றும் நபிவழியைக் கொண்டே தங்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

திருக்குர்ஆன் ஆதாரம்: மேலும்,(நபியே) அல்லாஹ் இறக் கிவைத்ததைக் கொண்டு நீர் அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பீராக! **அல்குர்ஆன் 5:49**

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ் அவனே தீர்ப்பளிப்பவன்.மேலும் அவனிடமே மீளுதல் இருக்கின்றது. **நூல் : அபூதாஊத்**

கேள்வி 32: இஸ்லாத்திற்கு எதிரான சட்டங்களை அமல் படுத்து வதின் நிலை என்ன?

பதில்: அவ்வாறான சட்டங்களை அனுமதிக்கப்பட்டவை என்று கருதி அதை விரும்பி அமல்படுத்துவது குஃப்ராகும் (இறை நிராகரிப்பாகும்).

திருக்குர்ஆன் ஆதாரம் : மேலும் எவர் அல்லாஹ் இறக்கிவைத்

தை தைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அத்தகையோர் தாம் நிராகரிப்பவர்களாவர். **அல்குர்ஆன் 5:44**

ஹதீஸ் ஆதாரம்: வேதக்காரர்களின் குருமார்கள் அல்லாஹ்வின் வேதத்தின் மூலம் தீர்ப்பளிக்க விட்டுவிட்ட போது அல்லாஹ் அவர்களுக்கு மத்தியில் பிளவையேற்படுத்திவிட்டான்.

நூல் : இப்னுமாஜஹ்

கேள்வி33: அல்லாஹ்வை தவிர்த்து மற்றவர்கள் மீது சத்தியம் செய்யலாமா?

பதில்: அல்லாஹ்வை தவிர்த்து மற்றவர்கள் மீது சத்தியம் செய்யக் கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : (நபியே) நீர் கூறுவீராக அவ்வாறல்ல! என் இரட்சகன் மீது சத்தியமாக!நிச்சயமாக நீங்கள் எழுப்பப் படுவீர்கள்.

அல்குர்ஆன்64:7

ஹதீஸ் ஆதாரம்: எவர் அல்லாஹ் அல்லாதவர்கள் மீது சத்தியம் செய்கிறாரோ அவர் அல்லாஹ்விற்கு இணைவைத்து விட்டவராவார்

நூல் : அஹ்மத்

கேள்வி:34 தாயத்து, மணியை, தொங்கவிடலாமா?

பதில்: ஒருபோதும் தொங்கவிடக்கூடாது, ஏனெனில் அவ்வாறு தொங்கவிடுவது இணைவைக்கும் செயலாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : இன்னும் (நபியே!) அல்லாஹ் உமக்கு ஏதாவது (ஒரு) துன்பத்தைக்கொண்டு பீடிப்பானாகில் அதனை நீக்கு வோர் அவனையன்றி வேறு ஒருவரும் இல்லை.

அல்குர்ஆன் 6:17

ஹதீஸ் ஆதாரம்: எவரொருவர் தாயத்தை தொங்கவிடுகிறாரோ அவர் அல்லாஹ்விற்கு இணைவைத்துவிட்டவர் ஆவார்.

நூல் : அஹ்மத்

கேள்வி35: எவற்றைக் கொண்டு அல்லாஹ்விடம் வஸீலாவைத் தேடுவது?

பதில்: அல்லாஹ்வின் அழகிய பெயர்கள், பண்புகள் மற்றும் நாம் செய்த நற்செயல்களைக் கொண்டு அல்லாஹ்விடம் வஸீலாவைத் தேட வேண்டும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : இன்னும்,அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன;ஆகவே, அவற்றைக்கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள். **அல்குர்ஆன் 7:180**

ஹதீஸ் ஆதாரம்: யா அல்லாஹ்! நீ எந்த பெயர்களையெல்லாம் உனக்கு சூட்டிருக்கிறாயோ அத்தகைய அனைத்து பெயர்களையும் கொண்டு நான் உன்னிடம் கேட்கிறேன். **நூல் : அஹ்மத்**

கேள்வி36: படைப்பினங்களிடம் வஸீலாவைத் தேடலாமா?

பதில்: அல்லாஹ்வை பிரார்த்திப்பதற்கு படைப்பினங்களிடம் வஸீலாவைத் தேட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

திருக்குர்ஆன் ஆதாரம் : மேலும் (நபியே) என்னுடைய அடியார் கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால்,(அதற்கு நீர் கூறுவீராக) நிச்சயமாக நான், (அவர்களுக்கு) மிகச்சமீபமாகவே இருக்குறேன்; அழைப்பவரின் அழைப்புக்கு அவர் என்னை அழைத்தால் நான் பதிலளிப்பேன். **அல்குர்ஆன் 2:186**

ஹதீஸ் ஆதாரம்: நிச்சயமாக நீங்கள் செவியேற்க்கும் நெருக்க

மானவனைத் தான் அழைக்கிறீர்கள்.மேலும் அவன் உங்களோடு தான் இருக்கிறான். நூல் : முஸ்லிம்)

கேள்வி37: நபி(ஸல்)அவர்களின் பணி என்ன?

பதில்: நபி(ஸல்)அவர்களின் பணி என்பது இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதேயாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : (நம்முடைய) தூதரே! உம் இரட்சகனிடமிருந்து உமக்கு இறக்கி வைக்கப்பட்டதை, (மனிதர்களுக்கு) எத்தி வைத்துவிடுவீராக! **அல்குர்ஆன் 5:67**

ஹதீஸ் ஆதாரம்: நபித்தோழர்கள் அரஃபா தினத்தன்று அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் இந்த மார்க்கத்தை முழுமையாக எத்திவைத்து விட்டீர்கள் என்று கூறிய போது அல்லாஹ்வே நீ இதற்கு சாட்சியாக இரு! என்று நபி(ஸல்)கூறினார்கள். **நூல் : முஸ்லிம்**

கேள்வி38: நபி(ஸல்)அவர்களின் பரிந்துரையை நாம் யாரிடம் கேட்க வேண்டும்?

பதில்: நபி(ஸல்)அவர்களின் பரிந்துரையை நாம் அல்லாஹ்விடம் மட்டுமே கேட்க வேண்டும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : (நபியே!) நீர் கூறுவீராக. பரிந்துரைகள் யாவும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். **அல்குர்ஆன் 39:44**

ஹதீஸ் ஆதாரம்: இறைவா! நபி(ஸல்)அவர்களை எனக்காக பரிந்துரை செய்பவராக ஆக்கியருள்வாயாக! **நூல்: திர்மிதி**

கேள்வி39: அல்லாஹ்வையும், அவனது தூதர்(ஸல்) அவர்களையும் நாம் எவ்வாறு நேசிப்பது?

பதில்: அல்லாஹ்வுக்கும் அவனது தூதர்(ஸல்) அவர்களுக்கும்

கீழ்ப்படுட்டு, அவர்களின் கட்டளைகளை பின்பற்றி நமது நேசத்தை வெளிப்படுத்த வேண்டும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : (நபியே! மனிதர்களிடம்,) நீர் கூறுவீராக "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால்,என்னை நீங்கள் பின்பற்றுங்கள். (அவ்வாறு நீங்கள் செய்தால்)அல்லாஹ் உங்களை நேசிப்பான். **அல்குர்ஆன் 3:31**

ஹதீஸ் ஆதாரம்: உங்களில் எவரும் நான் அவரிடத்தில் தன் தந்தை, தன் பிள்ளை, மற்றும் அனைத்து மக்களை விட அதிக நேசத் திற்குரியவராக ஆகாத வரை அவர் உண்மையான முஃமினாக (இறை நம்பிக்கையுடைவராக) ஆக முடியாது. **நூல் : புகாரி**

கேள்வி40: நபி(ஸல்)அவர்களை வரம்பு மீறி புகழலாமா?

பதில்: நபி(ஸல்)அவர்களை புகழ்வதில் நாம் வரம்பு மீறக்கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : (நபியே!) நீர் கூறுவீராக! நான் உங்களைப் போன்று ஒரு மனிதன் தான்; உங்களுடைய(வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப் படுகிறது. **அல்குர்ஆன்18:110**

ஹதீஸ் ஆதாரம்: கிறிஸ்த்தவர்கள் மர்யமின் குமாரரை(கடவுள் என்ற அந்தஸ்த்திற்கு உயர்த்தி)அளவு கடந்து புகழ்ந்ததைப் போல் நீங்கள் என்னை புகழாதீர்கள்.நான் அல்லாஹ்வின் அடிமையாக இருக்கிறேன். எனவே என்னை அல்லாஹ்வின் அடியான் என்றும் அவனது தூதர் என்றும் சொல்லுங்கள். **நூல் : புகாரி**

கேள்வி 41: படைப்பினங்களில் முதலாவதாக படைக்கப் பட்டது எது?

பதில்: மனிதர்களில் முதலாவதாக படைக்கப்பட்டவர் ஆதம் (அலை) அவர்களும், பொருள்களில் முதலாவதாக படைக்கப்பட்டது எழுது கோலாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : உமதிரட்சகன் மலக்குகளிடம், நிச்சயமாக "நான் மனிதனைக் களிமண்ணால் படைக்கப் போகிறேன்" என்று கூறிய வேளையை (நபியே நினைவு கூர்வீராக) **அல்குர்ஆன்38:71**

ஹதீஸ் ஆதாரம்: நிச்சயமாக அல்லாஹ் படைத்த முதல் படைப்பு எழுதுகோலாகும். **நூல்கள் : அபூதாஊத், திர்மிதி**

கேள்வி42: நபி(ஸல்)அவர்கள் எதிலிருந்து படைக்கப்பட்டார்கள்?

பதில்: நபி (ஸல்)அவர்கள் விந்திலிருந்து படைக்கப்பட்டார்கள்.

திருக்குர்ஆன் ஆதாரம் : அவன் எத்தகையவனென்றால், உங்களை (ஆரம்பத்தில்) மண்ணிலிருந்தும், பின்னர் இந்திரியத் துளியிலிருந்தும் படைத்தான். **அல்குர்ஆன் 40:67**

ஹதீஸ் ஆதாரம்: உங்களின் படைப்பு உங்கள் தாயின் வயிற்றில் நாற்பது நாட்களில் உருவாக்கப்படுகிறது. **நூல் : புகாரி**

கேள்வி43: அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதின் சட்டம் என்ன?

பதில்: தன் உடலாலும், பொருளாலும், நாவினாலும் ஜிஹாத் செய்வது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கட்டாய கடமையாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : இலேசாகவும்,கனமாகவும் (இளைஞர் கள், முதியவர்கள், செல்வந்தர்கள், செல்வமில்லாதவர்கள், வாகனத் தில் ஏறியவர்கள், நடப்பவர்கள் ஆகியோர்) புறப்பட்டு உங்களின் செல்வங்களாலும், உயிர்களாலும் அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் போர் செய்யுங்கள். **அல்குர்ஆன் 9:41**

ஹதீஸ் ஆதாரம்: இணைவைப்போர்களுடன் உங்கள் உடலாலும், பொருளாலும்,நாவினாலும் போரிடுங்கள். **நூல் : அபூதாஊத்**

கேள்வி44: முஃமின்களுடன்(இறைவிசுவாசிகளுடன்)நட்புறவு கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன?

பதில்: முஃமின்களை நேசிப்பதும், அவர்களுக்கு உதவுவதுமே அவர்களுடன் நட்புறவு கொள்ளுதல் ஆகும்.

திருக்குர்ஆன் ஆதாரம்: விசுவாசங்கொண்ட ஆண்களும், விசுவாசங் கொண்ட பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு உற்ற துணைவர்களாய் இருக்கின்றனர். **அல்குர்ஆன் 9:71**

ஹதீஸ் ஆதாரம்: ஒரு முஃமின் இன்னொரு முஃமினுக்கு கட்டிடத்தைப் போலாவார், அதனுடைய சில பகுதி மற்ற சில பகுதிக்கு வலு சேர்க்கிறது. **நூல் : முஸ்லிம்**

கேள்வி45: இறைமறுப்பாளர்களுடன் நட்புறவு கொள்வது, மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக அவர்களுக்கு உதவி புரிவது கூடுமா?

பதில்: ஒருபோதும் கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : உங்களில் எவரேனும் அவர்களை(த் தனக்குப்) பாதுகாவலராக்கிக்கொண்டால்,அப்போது நிச்சயமாக அவரும் அவர்களில் உள்ளவர்தாம். **அல்குர்ஆன் 5:51**

ஹதீஸ் ஆதாரம்: நிச்சயமாக அந்த குலத்தினர் என்னைச்சார்ந்த வர்கள் அல்ல ஏனெனில் அவர்கள் இறை மறுப்பாளர்களாக இருக்கின்றனர் என்று நபி(ஸல்)அவர்கள் ஒரு குலத்தினரைச் சுட்டிக்காட்டி கூறினார்கள்.

கேள்வி46: இறைநேசர்கள் என்றால் யார்?

பதில்: இறையச்சமுடைய இறைநம்பிக்கையாளர்களே இறை நேசர்கள் ஆவார்கள்.

திருக்குர்ஆன் ஆதாரம் : விசுவாசிகளே அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்கள் அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள். அவர்கள் எத்தகையோரென்றால், (அல்லாஹ்வை உண்மையாகவே) விசுவாசித்து, (அவனைப்) பயந்தவர்களாகவும் இருப்பார்கள்.

அல்குர்ஆன் 10:62, 63

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ்வும், ஸாலிஹான முஃமின்களும் தான் எனது நேசர்கள் ஆவார்கள். **நூல்கள் : புகாரி, முஸ்லிம்**

கேள்வி 47: அல்லாஹ் எதற்காக திருக்குர்ஆனை இறக்கியருளினான்?

பதில்: நாம் அதை படித்து அதன் வழிகாட்டுதலின் அடிப்படையில் நமது வாழக்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்லாஹ் திருக்குர்ஆனை இறக்கியருளினான்.

திருக்குர்ஆன் ஆதாரம் : (மனிதர்களே!) உங்களுக்காக உங்கள் இரட்சகனிடமிருந்து இறக்கிவைக்கப்பட்ட இவ்வேதத்தைப் பின்பற்றுங்கள்; அவனையன்றி மற்றெவரையும் (உங்களுக்குப்) பாதுகாவலர்(களாக ஆக்கி அவர்)களை நீங்கள் பின்பற்றாதீர்கள்.

அல்குர்ஆன் 7:3

ஹதீஸ் ஆதாரம்: திருக்குர்ஆனை படித்து அதன் படி செயல்படுங்கள். அதன் மூலம் வாழ்வாதாரத்தை தேடாதீர்கள். மேலும் அதன் மூலம் உங்கள் செல்வத்தை பெருக்கி கொள்ள முயற்சிக்காதீர்கள்.

நூல் : அஹ்மத்

கேள்வி48: ஸுன்னாவை விட்டு விட்டு திருக்குர்ஆனை மட்டும் போதுமானதாக ஆக்கி கொள்வது கூடுமா?

பதில்: ஸுன்னாவை விட்டு திருக்குர்ஆனை மட்டும் போதுமானதாக ஆக்கி கொள்வது கூடாது, அவ்வாறு ஆக்கி கொள்ளவும் முடியாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : மேலும், மனிதர்களுக்கு அவர்கள் பால் இறக்கி வைக்கப்பட்டதை நீர் அவர்களுக்கு தெளிவு படுத்துவதற் காக இவ்வேதத்தை நாம் இறக்கிவைத்தோம். **அல்குர்ஆன் 16:44**

ஹதீஸ் ஆதாரம்: மக்களே செவிதாழ்த்திக் கேளுங்கள்! நான் திருக் குர்ஆனையும், அதனுடன் அதுப் போன்ற இன்னொன்றையும் (ஸுன்னா வையும்) கொடுக்கப் பட்டுள்ளேன். **நூல் : அபூதாஊத்**

கேள்வி49: அல்லாஹ்வும்,அவனது தூதர்(ஸல்)அவர்கள் கூறிய கூற்றை விட்டு விட்டு மற்றவர்களின் கூற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாமா?

பதில்: அல்லாஹ்வும், அவனது தூதர்(ஸல்)அவர்கள் கூறிய கூற்றை விட்டு விட்டு வேறெந்த கூற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்க கூடாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வுக் கும், அவனுடைய தூதருக்கும் முன்னிலையில் நீங்கள் முந்தாதீர்கள்.

அல்குர்ஆன் : 49:1

ஹதீஸ் ஆதாரம்: படைப்பினங்களுக்கு கீழ்ப்படிந்து படைப்ாளனுக்கு மாறு செய்யக் கூடாது. கட்டுப்படுதல் என்பது நன்மையான விஷயங் களில் மட்டும் தான். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

கேள்வி 50: ஏதாவது விஷயத்தில் நமக்கு மத்தியில் கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டால் என்ன செய்வது?

பதில்: அதனுடைய தீர்வை நாம் திருக்குர்ஆனிலும், ஸுன்னா விலும் தேடவேண்டும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : யாதொரு விஷயத்தில் நீங்கள் பிணங்கிக் கொண்டால், அதனை அல்லாஹ்விடமும், (அவனுடைய) தூதரிடமும் திருப்பி (ஒப்படைத்து)விடுங்கள்,மெய்யாகவே நீங்கள், அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங்கொண்டவர்களாக இருந்தால். **அல்குர்ஆன் 4:59**

ஹதீஸ் ஆதாரம்: நான் உங்கள் மத்தியில் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன்,அதை பற்றிப்பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவரவே மாட்டீர்கள்.அவை அல்லாஹ்வின் வேதமும், எனது வழிமுறையுமேயாகும் **(முஅத்தா)**

கேள்வி 51 : இஸ்லாமிய மார்க்கத்தில் பித்அத் (நூதனச்செயல்) என்றால் என்ன?

பதில்: இஸ்லாமிய மார்க்கத்தில் ஆதாரமில்லாத ஒன்றை நன்மை என நினைத்து செய்வது பித்அத் என்று சொல்லப்படும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : மார்க்கத்தில் அல்லாஹ் எதற்கு அனுமதியளிக்கவில்லையோ அதை அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக் கூடிய இணையாளர்கள் அவர்களுக்கு இருக்கின்றார்களா? **அல்குர்ஆன் 42:21**

ஹதீஸ் ஆதாரம்: எவரொருவர் நமது இந்த மார்க்கத்தில் நாம் சொல்லாத ஒன்றை (நன்மை என நினைத்து)செய்கிறாரோ அது (அல்லாஹ்விடத்தில்) ஏற்றுக்கொள்ளப்படாது. **நூல் : முஸ்லிம்**

கேள்வி 52: இஸ்லாமிய மார்க்கத்தில் பித்அத்துன் ஹஸனா (நல்ல பித்அத்) என்று ஏதாவது உண்டா?

பதில்: இஸ்லாமிய மார்க்கத்தில் பித்அத்துன் ஹஸனா(நல்ல பித்அத்) என்று எதும் கிடையாது.

திருக்குர்ஆன் ஆதாரம் : இன்றையத்தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கி வைத்துவிட்டேன், என்னுடைய அருட் கொடையை உங்களின் மீது முழுமையாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக்கொண்டேன். **அல்குர்ஆன் 5:3**

ஹதீஸ் ஆதாரம்: மார்க்கத்தில் நூதனச் செயல்களை உருவாக்குவதை விட்டு நான் உங்களை எச்சரிக்கிறேன்.ஏனெனில் ஒவ்வொரு நூதனச் செயலும் பித்அத்தும்,வழிகேடுமாகும். **நூல் : அபூதாவூத்**

கேள்வி 53: மார்க்கத்தில் ஸுன்னத்துன் ஹஸனா(நல்ல நபிவழி) என்று ஏதாவது உண்டா?

பதில்: ஆம்.உதாரணமாக, ஒருவர் மார்க்கம் அனுமதித்த நல்ல காரியங்களை மக்களும் அதை பின்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் செய்கிறான் அது விரும்பத்தக்க விஷயமாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : அன்றியும் பயபக்தியுடையவர்களுக்கு எங்களை (நல்வழியில் நின்று அதன் பால் அழைக்கும்) வழிகாட்டியாகவும் நீ ஆக்குவாயாக **அல்குர்ஆன் 26:74**

ஹதீஸ் ஆதாரம். எவனொருவன் இஸ்லாத்தில் ஒரு நல்ல வழிமுறையை ஏற்படுத்துகின்றானோ அவனுக்கு அதனுடைய கூலியும்,அவனுக்கு பிறகு அதை நடைமுறைப் படுத்தக்கூடியவர்களின் எழுதப்படும். **நூல் : முஸ்லிம்**

கேள்வி 54: ஒரு மனிதன் தன்னை மட்டுமே சீர்திருத்திக் கொள்வது போதுமானதாகுமா?

பதில்: இல்லை; ஒரு முஸ்லிம் தன்னையும்,தன் குடும்பத்தாரையும் சீர்த்திருத்துவது அவசியமாகும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும்,நரக நெருப்பைவிட்டும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

அல்குர்ஆன் 66:6

ஹதீஸ் ஆதாரம்: நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருப்பாளி யையும் அவருக்கு வழங்கப்பட்ட பொருப்பை பற்றி அதை சரியாக நிறை வேற்றினாரா? அல்லது வீணடித்துவிட்டாரா? என்று விசாரிப்பான்.

நூல் : நஸயீ

கேள்வி 55: முஸ்லிம்களுக்கு எப்போது அல்லாஹ்வின் உதவி கிடைக்கும்?

பதில்: அவர்கள் தங்கள் இறைவனாகிய அல்லாஹ்வின் வேதத் தையும், நபி (ஸல்) அவர்களின் வழிமுறையையும் தங்கள் வாழ்வில் நடை முறைப்படுத்தினால் அவர்களுக்கு அல்லாஹ்வின் உதவி கிடைக்கும்.

திருக்குர்ஆன் ஆதாரம் : விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ் வுக்கு உதவி செய்தால் அவன் உங்களுக்கு உதவி செய்வான். மேலும் உங்களுடைய பாதங்களை நிலைபெறச்செய்வான்.

அல்குர்ஆன் 47:7

ஹதீஸ் ஆதாரம்: எனது சமூகத்தில் ஒரு கூட்டத்தினர் எப்பொழு தும் அல்லாஹ்வின் உதவியை பெற்றுக்கொண்டே இருப்பார்கள்.

நூல் : இப்னுமாஜஹ்

கேள்வி 56: நபிமார்களுக்கு பின் மனிதர்களில் யார் சிறந்தவர்கள்?

பதில்: நபிமார்களுக்கு பின் மனிதர்களில் சிறந்தவர்கள் நபித் தோழர்களேயாவார்கள்.

திருக்குர்ஆன் ஆதாரம் : முஹாஜிர்களிலும் அன்ஸாரிகளிலும் (இஸ்லாத்தை ஏற்க) முதலாவதாக முந்திக்கொண்டவர்களும், (அவர்களின் சொல், செயல்களாகிய) நற்கருமத்தில் அவர்களைப் பின் பற்றினார்களே அவர்களும் அவர்களை அல்லாஹ் திருப்தியடைந்தான்.

அல்குர்ஆன் 10:100

ஹதீஸ் ஆதாரம்: மக்களில் சிறந்தவர்கள் என் தலைமுறையினர் ஆவர். பின்னர் அவர்களை அடுத்துவருபவர்கள் பின்னர் அவர்களை அடுத்துவருபவர்கள் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

நூல்கள் புகாரி, முஸ்லிம்

கேள்வி 57: நபித்தோழர்களில் யார் சிறந்தவர்கள்?

பதில்: நபித்தோழர்களில் சிறந்தவர்கள் (வரிசையாக) அபூபக்கர் (ரலி,) உமர்(ரலி), உஸ்மான்(ரலி), அலி(ரலி) ஆவார்கள்.

திருக்குர்ஆன் ஆதாரம் : (நம்முடைய தூதராகிய) அவருக்கு நீங்கள் உதவி செய்யாவிட்டால்,(அதனால் அவருக்கு எந்த நஷ்டமும் ஏற்பட்டுவிடாது; ஏனென்றால்) நிராகரிப்போர் அவரை (ஊரைவிட்டு) வெளியேற்றிய சமயத்தில் திட்டமாக அல்லாஹ் அவருக்கு உதவி செய்துள்ளான், இருவரில் ஒருவராக அவர் மலைக்குகையில் இருந்த போது நம் தூதர் தன்னுடன் குகையில் இருந்த தோழராகிய அபூபக்கரை நோக்கி நீர் கவலைப்படாதீர் நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான் என்று கூறினார்கள்.

அல்குர்ஆன் 9:40

ஹதீஸ் ஆதாரம்: எனது வழிமறையையும், நேர்வழிப் பெற்ற

கலீஃபாக்களின் வழிமுறையையும் பின்பற்றுவது உங்கள் மீது அவசியமாகும். நீங்கள் அதனை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனை உங்கள் கடைவாய்ப் பற்களைக்கொண்டு பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். **நூல் : அபூதாவூத்**

கேள்வி 58: திருக்குர்ஆனில் வசனங்கள் இடமாற்றம் செய்யப் பட்டிருக்கின்றன அல்லது அதில் "கையாடல் நடந்துள்ளது" என்று சொல்பவனைப் பற்றி மார்க்கம் என்ன சொல்கிறது?

பதில்: அப்படி சொல்பவன் காஃபிர்(இறைமறுப்பாளன்) ஆகி விட்டான்.

திருக்குர்ஆன் ஆதாரம் : நிச்சயமாக நாம் தான் திக்ர் என்னும் இவ் வேதத்தை உம்மீது இறக்கிவைத்தோம்: நிச்சயமாக நாமே அதனை பாது காப்பவர்கள். **அல்குர்ஆன் 15:9**

ஹதீஸ் ஆதாரம்: நான் உங்கள் மத்தியில் இரண்டு விஷயங் களை விட்டுச் செல்கிறேன். அதை பற்றிப்பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவறவே மாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் வேத மும், எனது வழிமுறையுமாகும் **(முஅத்தா)**

கேள்வி59: அல்லாஹ்வின் கோபத்திற்குறியவர்கள்,மற்றும் வழிதவறியவர்கள் யார்?

பதில்: அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளானவர்கள் யூதர்கள். மற்றும் வழிதவறியவர்கள் கிருத்துவர்கள் ஆவார்கள்.

திருக்குர்ஆன் ஆதாரம் : அவ்வழி உன் கோபத்திற்கு உள்ளான வர்களுடையதும் அல்ல, வழி தவறியவர்களுடையதும் அல்ல.

ஹதீஸ் ஆதாரம்: அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளானவர்கள் யூதர்கள், மற்றும் வழிதவறியவர்கள் கிருத்துவர்கள் ஆவார்கள். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். **நூல் : திர்மிதி**